# வலயக்கல்வி அலுவலகம் – வடமராட்சி

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2024

தரம் - 06 | விஞ்ஞானம் | நேரம் : 2.00 மணி

பகுதி I

- அனைத்து வினாக்களுக்கும் விடைதருக.
- மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.


1) தற்போசணி அங்கி எது?
   1. அமீபா   2. பற்றீரியா   3. காசித்தும்பை   4. பங்கசு

2. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் நீண்ட காலமாக நிலவுகின்ற வளிமண்டல நிலைமை எவ்வாறு அழைக்கப்படும்.
   1. வானிலை   2. காலநிலை   3. வரட்சி   4. ஈரப்பதன்


3. செயற்கை ஒளிமுதல் எது?
   1. சந்திரன்   2. நட்சத்திரம்   3. மெழுகுதிரிசுவாலை   4. சூரியன்

4. சரியான விடையை தெரிவு செய்க.
   1. பல உணவு வலைகளுக்கிடையில் உள்ள தொடர்பு மூலம் உணவுச்சங்கிலி உருவாக்கப்படுகின்றது.
   2. உணவுச் சங்கிலியின் இரண்டாவது இணைப்பு எப்போதும் ஊனுண்ணி ஆகும்.
   3. உணவுச் சங்கிலி ஊடாக சூரிய சக்தியே கடத்தப்படுகின்றது.
   4. உணவுச் சங்கிலி ஒன்றின் உற்பத்தியாக்கி எப்போதும் ஊனுண்ணி ஆகும்.

5. பென்சில் ஒன்று மெல்லிய கம்பியினால் சுற்றப்பட்டு மின்கலத்திற்கு இணைக்கப்பட்டுள்ளதை படம் காட்டுகின்றது. இங்கு எதிர்பார்க்கப்படும் அவதானம் யாது?
   1. மின்வடம் உருகும்
   2. மின்வடம் சூடாகும்
   3. மின்வடத்தில் ஒளி தோன்றும்
   4. மின்வடத்தின் நீளம் அதிகரிக்கும்.




6. புவியில் உள்ள நீரின் அளவை பின்வரும் வட்ட வரைபு குறித்துக்காட்டுகின்றது. கடலில் உள்ள நீரின் அளவையும், நுகரக்கூடிய நீரின் அளவையும் குறிப்பிடுக. எழுத்துக்கள் முறையே.




   1. Aயும், Bயும்
   2. Bயும், Cயும்
   3. Aயும், Cயும்
   4. Cயும், Bயும்

7. இரு சட்டக்காந்தங்களும் அருகருகே வைக்கப்பட்டுள்ளதை பின்வரும் படம் காட்டுகின்றது. A.B ஆகியவற்றில் இருந்து பெறக்கூடிய அவதானமாக அமைவது?
   1. A கவரும், B தள்ளம்
   2. A தள்ளும், B கவரும்
   3. A.B இரண்டும் கவரும்
   4. A.B இரண்டும் தள்ளும்








kalvi.lk


8. கீழே தரப்பட்டுள்ள விலங்குகளின் இடப்பெயர்ச்சி அங்கங்களை முறையாக குறிப்பது.




1. செட்டை, இறகுகள், அவயவங்கள்
2. பூக்கள், இறக்கைகள், அவயவங்கள்
3. செட்டை, இறக்கைகள், அவயவங்கள்
4. கால்கள், இறக்கைகள், செட்டை

9. ஒலியும் கேட்டலுடனும் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களுள் பிழையான கூற்றை தெரிவு செய்க.
   1. அதிர்வின் மூலம் ஒலி உற்பத்தி செய்யப்படுகின்றது.
   2. சந்தத்திற்கேற்ப இசைக்கின்ற, மீட்கின்ற ஒலி இசை ஆகும்.
   3. அதிக இசை ஒலியினால் செவிகளுக்கு பாதிப்பு ஏற்படாது
   4. சந்தத்திற்சேற்ப ஒலிக்காதவை சத்தம் ஆகும்.

10. எளிய மின்கலத்தின் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது. A.B யாக பயன்படுத்தக்கூடிய பதார்த்தங்களை பெயரிடுக.
   1. செப்புத்தகடு, நாகத்தகடு
   2. நாகத்தகடு, செப்புத்தகடு
   3. இரு செப்பு தகடுகள்
   4. இரு நாகத் தகடுகள்




11. தரப்பட்ட உபகரணங்களின் தொழிற்பாட்டினை சரியான ஒழுங்கில் குறிப்பது



   1. காற்றின் வேகத்தை அளத்தலும். காற்றின் திசையை அறிதலும்
   2. காற்றின் திசையை அறிதலும், காற்றின் வேகத்தை அளத்தலும்
   3. காற்றின் திசையை அறிதலும், ஈரப்பதனை அளத்தலும்
   4. ஈரப்பதனை அளத்தலும், காற்றின் திசையை அறிதலும்.

12. ஒளி ஊடுகாட்டும், ஒளி ஊடுகசியும், ஒளி ஊடுபுகவிடாத பொருட்கள் அன்றாட வாழ்வில் பயன்படும் சந்தர்ப்பங்களை கீழுள்ள அட்டவணை காட்டுகின்றது. A,B,C, ற்கு பொருத்தமான விடையாக அமைவது.

| பயன்படுத்தப்பட்ட பொருள் | ஒளிஊடுகாட்டும் ஒளி ஊடுகசியும், ஒளி ஊடுகாட்டாது | சந்தர்ப்பம் |
|---|---|---|
| 1. கண்ணாடி | A. ........................................ | புகைப்பட சட்டகத்திற்கு முன்னால் பயன்படும். |
| 2. ரிசு கடதாசி | B. ........................................ | வெசாக் கூடுகள் அமைத்தல் |
| 3. காட்போட் | C. ........................................ | பெட்டிகள் தயாரித்தல் |


1. ஒளி ஊடுகசியும், ஒளி ஊடுகாட்டும், ஒளி ஊடுகாட்டாது
2. ஒளி ஊடுகசியும், ஒளி ஊடுகாட்டாது, ஒலி ஊடுகசியும்
3. ஒளி ஊடுகாட்டாது, ஒளி ஊடுககாட்டும், ஒளி ஊடுகசியும்
3. ஒளி ஊடுகாட்டும், ஒளி ஊடுகசியும், ஒளி ஊடுகாட்டாது



kalvi.lk

13. தாவரங்களில் மட்டும் நடைபெறும் செயன்முறை
1. ஒட்சிசனை உள்ளெடுத்து காபனீரொட்சைட்டு வெளிவிடல்
2. காபனீர் ஒட்சைட்டு உள்ளெடுத்து, ஒட்சிசனை வெளிவிடல்
3. ஒட்சிசனை பயன்படுத்தி உணவை தொகுத்தல்
3. உணவைப் பயன்படுத்தி ஒட்சிசனை உருவாக்கல்


14. மலை உச்சியில் பயன்படுத்தப்பட்ட மிகப் பொருத்தமான சக்திமுதல் எது?




1. காற்று
2. ஓடும் நீர்
3. வற்றுப் பெருக்கு அலை
4. சுவட்டு எரிபொருள்

15. காற்றில் காட்டப்பட்டுள்ள A.B.C குறியீடுகளை அடையாளம் காண்க.
1. அம்பியர்மாணி, மின்குமிழ், உலர்கலம்
2. மின்குமிழ், அம்பியர்மானி, உலர்கலம்
3. உலர்கலம், மின்குமிழ், அம்பியர்மாணி
4. மின்குமிழ், உலர்கலம், அம்பியர்மாணி

16. மடிப்படைந்து வளி நிரம்பிய பிளாஸ்டிக் பந்தானது சுடுநீரில் இடும்போது, அது மீண்டும் கோள வடிவாக மாற்றமடையும் இதற்கான காரணம்



1. பந்து விரிவடைந்துள்ளது
2. பந்தினுள் காணப்பட்ட வளி விரிவடைந்துள்ளது.
3. பந்தினுள் நீர் சென்றுள்ளது.
4. திரவத்தை விட வாயு வேகமாக விரிடையும்

17. இயற்கை அனர்த்தங்கள் சூழலை எவ்வாறு பாதிக்கின்றன?
1. அலை சூழலை பாதிப்பதில்லை
2. அலை இயற்கையான வாழிடல்களை அழிக்கின்றன.
3. அலை மண்ணரிப்பை ஏற்படுத்தாது
4. அலை நீர் வளங்களை பாதிக்காது

18. தாவரங்கள் வளிமண்டலத்தில் இருந்து காபனீர் ஒட்சைட்டு வாயுவை பிரதானமாக பெற்றுக்கொள்வது.
1. வேர் 2. தண்டு 3. பூ 4. இலை

19. காந்தம் ஒன்றின் வடமுனைவுவினை அடையாளம் காண்பதற்கு பயன்படுத்தப்படும் முறை
1. வடமுனை, தென்முனைவு குறிக்கப்பட்ட இன்னொரு காந்தத்தை பயன்படுத்துவதன் மூலம்
2. முனைவுகள் குறிக்கப்பட்ட அல்லது குறிக்கப்படாத ஏதாவது ஒரு காந்தம் மூலம்
3. இரும்பு சட்டம் ஒன்றை பயன்படுத்தி
4. இரும்புத் தூளைப் பயன்படுத்தி

20. உயிருள்ள தம்மைப் போன்ற இயல்புடைய அதிகமானவற்றை உற்பத்தி செய்வது
1. இனப்பெருக்கம் 2. கழிவகற்றல் 3. சுவாசம் 4. சமிபாடு

**சரியான கூற்றுக்களுக்கு எதிரே (சரி) அடையாளமும், பிழையான கூற்றுகளுக்கு எதிரே (பிழை) எனவும் அடையாளம் இடுக.**

1. ஒலியானது சக்தியின் ஒரு வடிவமாகும். ( )
2. மரத்தூளும் இரும்புத்தூளும் கலந்த கலவையை பிரித்தெடுக்க காந்தம் பயன்படும். ( )
3. குறிப்பிட்ட இடத்தில் குறுகிய காலப்பகுதியில் காணப்படும் வளிமண்டல நிலை காலநிலை எனப்படும் ( )
4. காற்றின் வேகத்தை அளப்பதற்கு காற்று வேகமானி பயன்படும் ( )
5. சிங்கம் மறைமுகமாக தாவரத்தில் தங்கியுள்ளது. (


kalvi.lk

03) பொருத்தமான சொற்களைக் கொண்டு கீறிட்ட இடங்களை நிரப்புக.
(தற்போசணி, இருவாயி, சக்தி, காந்தமுனைவு, அதிர்வு, சூரியன், வெப்பநிலை)

1. மின்னோட்டத்தை ஒரு திசையில் மட்டும் கடத்துவதற்கு பயன்படும் இலத்திரனியல் கூறு

................................................................................................................................................................

2. பொருள் கொண்டுள்ள வெப்ப சக்தியின் அளவு ..............................................................................

3. .................................................................................... மூலம் ஒலி உருவாக்கப்படுகின்றது.

4. .................................................................................... ஆனது காந்தபுலம் அதிகமாக காணப்படும் பிரதேசம் ஆகும்.

5. ஒளித்தொகுப்பிற்கு தேவையான சக்தியானது ............................................ மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

(5புள்ளி)

## பகுதி II

• நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01) A பின்வரும் இருகிளைச்சாவியை பூரணப்படுத்துக.

மாடு, அணில், திமிங்கலம், சிலந்தி

1. ..........................................  2. ..........................................


உ+ம் (மாடு, 3. ...................................)  உ+ ம் (4) ..........................................., திமிங்கலம்)

கொம்புகள் காணப்படும்  
உ+ ம் மாடு

கொம்புகள் காணப்படாது  
உ+ ம் (8) ...........................

6) ..............................  
உ+ ம் சிலந்தி

7) ..............................  
உ+ ம் (9) .........




B. 1. மேலுள்ள சுற்றில் உள்ள A.B ஆகியவற்றை

2. A யின் பிரதான பயன்பாடு யாது?


3. இச்சுற்றில் மின்னோட்டமானது A லிருந்து B யிற்கு, அல்லது A யிற்கா செல்லும்

4. மேலுள்ள சுற்றில் A யினை நீக்கி தடையியினை இணைக்கும் போது மின்குமிழின் பிரகாசத்தில் ஏற்படும் மாற்றம் யாது?



kalvi.lk


02) சடப்பொருளின் இயல்பிணை பின்வரும் பரிசோதனை விளக்குகின்றது.




1. சடப்பொருளின் எந்த இயல்பு மேலுள்ள பரிசோதனை மூலம் காட்டப்படுகின்றது?
2. மேலே கூறிய இயல்பினை விளக்குவதற்கு யாது செய்வீர்?
3. மேலே கூறப்பட்ட அவதானத்தை பெயரிடப்பட்ட வரைபடமாக வரைக.

4. திண்மச் சடப்பொருட்களின் இயல்புகள் 2 தருக.
5. பின்வருவனவற்றை அளவீடு செய்ய பயன்படும், ஆய்வுகூட உபகரணத்தை தருக.
   i. திரவங்களின் கனவளவு: ....................................
   ii. திணிவு: ......................................................................

03. வளிமண்டலத்தில் நீராவி உண்டு என்பதனை காட்டும் செயற்பாடு காட்டப்பட்டுள்ளது.




1. முகவையினுள் பனிக்கட்டி இடப்பட்டதன் பின்பு அவதானம் யாது?
2. மேலுள்ள அவதானத்திற்குரிய காரணம் யாது?
3. புவியில் உள்ள நுகரக்கூடிய நீரின் சதவீதம் யாது?
4. புவியின் மேற்பரப்பு 70% நீரால் சூழப்பட்டிருப்பினும், நீர் வரையறுக்கப்பட்ட வளமாக கருதப்படக் காரணம் யாது?
5. நீர் மாசடைதல் என்றால் என்ன?
6. நீர் மாசடையும் முறைகள் 2 தருக.

04.

A. பின்வரும் சொற்களைக் கொண்டு விடை தருக.


a. தாவரங்கள் b. கடல்அனிமனி c. அமீபா
d. தவளை e. அகத்தி f. வெளவால் g. மண்புழு

1. வெற்றுக் கண்ணால் அவதானிக்க முடியாத அங்கி ..........................................................
2. இடம்பெயர்வு காணப்படாத விலங்கு ............................................................................
3. மாலை வேளையில் இலைகள் சுருங்கும் தாவரம் ..................................................
4. ............................................................... வரையறுக்கப்படாத வளர்ச்சியைக் காட்டும்.
5. சுவாசத்திற்கு தோல், சுவாசப்பை, வாய்க்குழியை பயன்படுத்தும் அங்கி ................................
6. தனது எச்சங்களுக்கு பிறப்பை கொடுக்கும் விலங்கு ....................................................................



kalvi.lk

B.




1. உணவு வலையில் உள்ள உற்பத்தியாக்கியை பெயரிடுக.
2. உணவு வலையில் உள்ள நுகரிகள் 3 தருக.
3. தவளையின் உணவு எது?
4. உணவு வலையில் உள்ள இரைகௌவியை பெயரிடுக.

05.

A. வெப்பமேற்றும்போது பொருட்கள் சூடாகின்றன. சூடு அல்லது குளிரின் அளவீடு வெப்பநிலை ஆகும்.


i. கம்பி வளையத்தை வெப்பமேற்றும்போது அவதானம் யாது?
ii. மேலுள்ள அவதானத்திற்கான காரணத்தை தருக.



B. பொருட்களின் அதிர்வு மூலம் ஒலி உருவாக்கப்படுகின்றது.

1. ஒலியை உருவாக்கும் பொருட்கள் எவ்வாறு அழைக்கலாம்?
2. சத்தமற்ற ஒலிகள் சத்தம் எனப்படும். நகரப்புற சூழலில் கேட்கக்கூடிய இரு வகையான சத்தங்களைத் தருக,
3. ஒலியுடன் தொடர்பான செயற்பாட்டிற்காக தரம் 6 மாணவர்களால் உருவாக்கப்பட்ட உபகரணம் அருகில் காட்டப்பட்டுள்ளது.

a. உபகரணத்தை பெயரிடுக.



b. மேலுள்ள உபகரணத்தை அமைக்க தேவையான பொருட்கள் 2 தருக.
c. இவ் உபகரணத்தை போன்று ஒலியை உருவாக்கும் வேறு இரு உபகரணங்களை பெயரிடுக.



kalvi.lk

6. A. பலவகைப்பட்ட காந்தங்கள் காணப்படுகின்றன

1. தரப்பட்ட காந்தங்களை பெயரிடுக.





2. உமக்கு பின்வரும் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இரும்பு துண்டு, பித்தளை ஆணி, செப்புக்கம்பி, நாணயம், ஊசி, பிளாஸ்ரிக் துண்டு, தையல்ஊசி, மரத்துண்டு)

| காந்தத்தால் கவரப்படும் பொருட்கள் | காந்தத்தால் கவரப்படாத பொருட்கள் |
| --- | --- |
| | |


• தரப்பட்ட பொருட்களைக் கொண்டு அட்டவணையை நிரப்புக.

B) சூரிய ஒளி தெறிப்படையும் விதத்தை பின்வரும் வரைபடத்தில் வரைக.




c) சக்தி முதல்களை பெயரிடுக.


1.



2.



3.





kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**